# முஸ்லிம் இல்லத்தின் நெறிமுறைகள்

[ தமிழ் – Tamil – تاميلي ]

ஷெய்க் முஹம்மத் பின் சாலிஹ் அல் முன்ஜித்

மொழிபெயர்ப்பு

ஜாசிம் பின் தஇயான்

2013 - 1434

IslamHouse.com

# آداب البيت المسلم

« باللغة التاميلية »

محمد صالح المنجد

ترجمة: جاسم دعيان

2013 - 1434

IslamHouse.com

# முஸ்லிம் இல்லத்தின் நெறிமுறைகள்

## 1. இரவில் கதவுகளை மூடுதல், தூங்குவதற்து முன் அடுப்பில் நெருப்புகளை அனைத்தல், பாத்திரங்களை மூடிவைத்தல், பிள்ளைகள் வீட்டுக்கு வெளியில் போகாது தடுத்துக் கொள்ளுதல்.

நபி ஸல்லல்வாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய பின் வரும் ஹதீஸை ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்தார்கள். ஆதாரம் புஹாரி, முஸ்லிம்.

عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِذَا اسْتَجْنَحَ اللَّيْلُ أَوْ قَالَ جُنْحُ اللَّيْلِ فَكُفُّوا صِبْيَانَكُمْ فَإِنَّ الشَّيَاطِينَ تَنْتَشِرُ حِينَئِذٍ فَإِذَا ذَهَبَ سَاعَةٌ مِنْ الْعِشَاءِ فَخَلُّوهُمْ وَأَغْلِقْ بَابَكَ وَاذْكُرْ اسْمَ اللَّهِ وَأَطْفِئْ مِصْبَاحَكَ وَاذْكُرْ اسْمَ اللَّهِ وَأَوْكِ سِقَاءَكَ وَاذْكُرْ اسْمَ اللَّهِ وَخَمِّرْ إِنَاءَكَ وَاذْكُرْ اسْمَ اللَّهِ وَلَوْ تَعْرُضُ عَلَيْهِ شَيْئًا

“இரவு துவங்கும் போது உங்கள் பிள்ளைகளை (வீட்டிற்குள்) தடுத்துக் கொள்ளவும். அந்த நேரத்தில் ஷைத்தான் பரவிச் செல்கிறான். இஷா நேரத்தின் சொற்ப காலம் கழிந்த பின், அவர்களுக்கு அனுமதி கொடுக்கவும். வீட்டுக் கதவுகளை பூட்டி வைக்கவும். அல்லாஹ்வின் பெயரை நினைவு படுத்தவும். உங்கள் பாத்திரங்களை மூடி வைக்கவும். அல்லாஹ்வின் பெயரை நினைவு படுத்தவும். அந்த (மூடியின் மீது) எதையேனும் குறுக்காக வைத்தாலும் பரவாயில்லை. ”பாத்திரத்தை மூடி வைக்கவும்.” என முஸ்லிமில் குறிப்பிடப்பட்டுள்ளது.

خَمِّرُوا الْآنِيَةَ وَأَوْكُوا الْأَسْقِيَةَ وَأَجِيفُوا الْأَبْوَابَ وَاكْفِتُوا صِبْيَانَكُمْ عِنْدَ الْعِشَاءِ فَإِنَّ لِلْجِنِّ انْتِشَارًا وَخَطْفَةً وَأَطْفِئُوا الْمَصَابِيحَ عِنْدَ الرُّقَادِ فَإِنَّ الْفُوَيْسِقَةَ رُبَّمَا اجْتَرَّتْ الْفَتِيلَةَ فَأَحْرَقَتْ أَهْلَ الْبَيْتِ

ஸஹீஹ் புஹாரியில் இந்த ஹதீஸ் இவ்வாறு அறிவிக்கிறது.

நீங்கள் பாத்திரங்களை மூடி வைக்கவும். நீர் வைக்கும் தோல் பைகளின் வாயை கட்டி வைக்கவும். இஷா நேரத்தில் உங்கள் பிள்ளைளை (வெளியில் நடமாடாது) தடுத்துக் கொள்ளவும். நிச்சயமாக (அந்நேரம்) வெளிக் கிளம்பும் அல்லது நடமாடும் ஜின்களுக்குரியது. தூங்கப் போகும் போது, விளக்குகளை அனைத்து விடவும். சில வேளை எலி (விளக்கின் திரியை) இழுத்துச் சென்று (வீட்டையும்) வீட்டில் உள்ளவர்களை நெருப்புக்கு இறையாக்கக் கூடும்.

புஹாரி, முஸ்லிம் கிரந்தங்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

لَا تَتْرُكُوا النَّارَ فِي بُيُوتِكُمْ حِينَ تَنَامُونَ

நீங்கள் தூங்கப் போகும் போது, உங்கள் வீடுகளில் நெருப்பு (எரிவதற்கு) இடம் வைக்க வேண்டாம்.

அபு மூஸா (ரழியல்லாஹு அன்ஹு) அறிவித்த ஹதீஸ் ஒன்று புஹாரி, முஸ்லிம் இவ்வாறு அறிவிக்கப் படுகிறது.

ஒரு இரவு மதீனாவில் வீடொன்று அவ்வீட்டில் வசிப்பவர் களுடன் எரிந்து சாம்பலானது. இந்த விபத்து பற்று நபி (ஸல்)அவர்களுக்கு அறிவிக்கப் பட்டது. அப்போது அன்னார் இவ்வாறு கூறினார்கள்.

قَالَ احْتَرَقَ بَيْتٌ بِالْمَدِينَةِ عَلَى أَهْلِهِ مِنْ اللَّيْلِ فَحُدِّثَ بِشَأْنِهِمْ النَّبِيُّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِنَّ هَذِهِ النَّارَ إِنَّمَا هِيَ عَدُوٌّ لَكُمْ فَإِذَا نِمْتُمْ فَأَطْفِئُوهَا عَنْكُمْ

“நிச்சயமா இந்த நெருப்பு, உங்களது எதிரியாகும். நீங்கள் தூங்கச் சென்றால் உங்களை விட்டும் தூரமாக்குவதற்கு அதனை அனைத்து விடவும்.”

இது ஸுனன் அபு தாவுதில் கூறப்படும் இன்னுமொரு ஹதீஸாகும்.

جَاءَتْ فَأْرَةٌ فَأَخَذَتْ تَجُرُّ الْفَتِيلَةَ فَجَاءَتْ بِهَا فَأَلْقَتْهَا بَيْنَ يَدَيْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَى الْخُمْرَةِ الَّتِي كَانَ قَاعِدًا عَلَيْهَا فَأَحْرَقَتْ مِنْهَا مِثْلَ مَوْضِعِ الدِّرْهَمِ فَقَالَ إِذَا نِمْتُمْ فَأَطْفِئُوا سُرُجَكُمْ فَإِنَّ الشَّيْطَانَ يَدُلُّ مِثْلَ هَذِهِ عَلَى هَذَا فَتُحْرِقَكُمْ

ஒரு நாள், எலியொன்று எரியும் நெருப்புத் திரியை நபியவர்கள் அமர்ந்திருந்த விரிப்பில் போட்டுவிட்டது. இதன் காரணமாக திர்ஹம் நாணயத்தின் அளவுக்கு விரிப்பு எரிந்து விட்டது. அச் சந்தர்ப்பத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “நீங்கள் தூங்கப் போவதாக இருந்தால், உங்களுடைய (வீட்டு) விளக்கை அனைத்து விடவும் நிச்சயமாக, ஷெய்தான் இவ்வாறான தோற்றத்தில் வந்து உங்களை எரித்து விடக் கூடும்”

ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த ஹதீஸொன்று முஸ்லிம் கிரந்தத்தில் இவ்வாறு பதியப் பட்டுள்ளது.

لَا تُرْسِلُوا فَوَاشِيَكُمْ وَصِبْيَانَكُمْ إِذَا غَابَتْ الشَّمْسُ حَتَّى تَذْهَبَ فَحْمَةُ الْعِشَاءِ
فَإِنَّ الشَّيَاطِينَ تَنْبَعِثُ إِذَا غَابَتْ الشَّمْسُ حَتَّى تَذْهَبَ فَحْمَةُ الْعِشَاءِ

fபவாஷி எனும் உங்கள் பண்ணையின் மிருகங்களையும், உங்கள் பிள்ளைகளையும், சூரியன் அஸ்தமித்து ப(f)ஹ்மத்துல் இஷா எனும் இருள் பரவும் நேரம் வரை (வெளியில்) அனுப்பாதீர்கள். நிச்சயமாக, சூரியன் அஸ்தமித்து இரவின் இருள் பரவும் வரையான நேரத்தில் ஷெய்தான் வெளியில் கிளம்புகின்றான்.''

இமாம் நவவி இந்த ஹதீஸுக்கு இவ்வாறு விளக்கம் கொடுத்துள்ளார்கள்.

அல் fபவாஷி என்பது ஒட்டகம், மாடு, ஆடு, ஏனைய மிருகங்கள் போன்ற வருமானம் சம்பந்தப் பட்டவையாகும், fபவாஷி என்பது fபாஷியா என்ற வார்த்தையின் பன்மையாகும். அதாவது பரவலாக வளரும் என்ற பொருளைக் கொண்டது. இந்த மிருகங்கள் பூமியில் பரவலாக பெருகி வாழ்வதால் இந்த வார்த்தை உபயோகப் படுத்தப் பட்டுள்ளது.

ப(f)த்மத்துல் இஷா என்பது, இஷாவின் இருட்டாகும். அந்த நேரத்தில் இருளாக இருக்கும். இது இரவின் ஆரம்பம், இருளின் ஆரம்பம் என்றும் சில அறிஞர்கள் கருத்து தெரிவித் துள்ளார்கள். இது மஹ்ரிப் நேரத்திற்கும், இஷா தொழுகைக்கும் இடைப் பட்ட நேரம் என்றும், இஷா தொழுகைக்கும் விடி காலை நேரத்துக்கும் இடைப்பட்ட காலம் என்றும் வேறு சில அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இப்னு தகீக் அல் ஈத் என்ற அறிஞர், “இது கடமையாக்கப் பட்ட கட்டளையல்ல. தமது நோக்கத்தின் (சந்தர்ப்பத்தின்)

அடிப்  படையில் இதனை மாற்றிக் கொள்ள முடியும். சில சந்தர்ப்பங்களில அவை சுன்னாவின் நிலையில் இருக்கக் கூடும். அதாவது, எல்லா சந்தர்ப்பத்திலும் பிஸ்மி கூறுவது போன்றது, மற்றும் சில சுன்னாஹ் அல்லது வழிகாட்டல் வகையைச் சாரும். உதாரணமக, மூடப்பட்டிருக்கும் கதவுகளை ஷெய்தான் திறக்க மாட்டான் என்ற காரணத்தால், பாதுகாப்பு கருதி கதவுகளை மூடி வைப்பது. இங்கு உலக ரீதியில் பாதுகாப்பு கிடைப்பது போன்று, ஷெய்தானின் நடமாட்டத்தி லிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது. தண்ணீர் வைக்கும் தோல் பைகளின் வாயை கட்டி வைப்பதும், பாத்திரங்களை மூடி வைப்பதும் இது போன்ற செயல்களாகும்.

அன்னார் மேற்கொண்டும் இவ்வாறு அறிவித்தார்கள்.
வீட்டுக் கதவுகளை மூடுவதற்கான கட்டளையாவது, மார்க்க ரீதியான நன்மைகள் மாத்திரமன்றி, திருடர்கள், எதிரிகள், கலகங்கள் விளைவிப்பவர்கள் போன்றவர்களிடமிருந்து, உயிரையும், செல்வங்களையும் பாதுகாத்துக் கொள்வது போன்ற இவ்வுலக நன்மைகளும் அடங்கியுள்ளன. விஷேடமாக ஷைத்தானிடமிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது.

தீய சக்திகள் ஒன்று கூடுவதற்கு பொருத்தமான நேரம் இரவு தான் என்பதினால், .இப்படிப்பட்ட நேரங்களில் பிள்ளைகளை வெளியில் விட வேண்டாம் எனும் கட்டளை கொடுக்கப் பட்டுள்ளது, இரவின் ஆரம்பத்தில் ஷைத்தான்கள் வெளியில் பரவிச் செல்வதால், அவர்களினால் சிறு பிள்ளைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

அதே போன்று பாத்திரங்களை மூடி வைக்க வேண்டும் என்ற கட்டளை மிகவும் முக்கியமானதாகும். நவீன காலத்தில் குளிர் சாதனப்பெட்டி பெரியதோர் பாத்திரமாக கருதப்படுகிறது. ஒவ்வெரு பாத்திரமாக மூடி வைக்கா விட்டாலும், பாத்திரங்

களை குளிர் சாதனப் பெட்டிக்குள் வைத்து, அதன் கதவை மூடி வைப்பதும் இந்தக் கட்டளைக்கு ஏற்ப செயல் புரிவதாக கருதப்படும். இதன் அடிப்படையில் அல்லாஹ்வின் பெரை நினைவு படுத்தி இக்காரியத்தை செய்யவும்.

## 2. வீட்டுக்குள் செல்லும் போது பிஸ்மி கூறிச் செல்வது

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பின் வருமாறு கூறியதாக ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். ஆதாரம் முஸ்லிம்.

إِذَا دَخَلَ الرَّجُلُ بَيْتَهُ فَذَكَرَ اللَّهَ عِنْدَ دُخُولِهِ وَعِنْدَ طَعَامِهِ قَالَ الشَّيْطَانُ لَا مَبِيتَ لَكُمْ وَلَا عَشَاءَ وَإِذَا دَخَلَ فَلَمْ يَذْكُرْ اللَّهَ عِنْدَ دُخُولِهِ قَالَ الشَّيْطَانُ أَدْرَكْتُمْ الْمَبِيتَ وَإِذَا لَمْ يَذْكُرْ اللَّهَ عِنْدَ طَعَامِهِ قَالَ أَدْرَكْتُمْ الْمَبِيتَ وَالْعَشَاءَ

ஒரு மனிதர் தனது வீட்டுக்குள் செல்லும் சந்தர்ப்பத்தில், மற்றும் உணவு சாப்பிடும் நேரத்தில் அல்லாஹ்வை நினைவு படுத்தினால், ஷைத்தான் (தன் நண்பர்களை நோக்கி) உங்களுக்கு இன்றிரவு தங்குமிடம் கிடையாது, அத்துடன் இரவு உணவும் கிடையது என்று கூறுவான். வீட்டுக்குள் செல்லும் போது அல்லாஹ்வை நினைவு கூறாது விட்டால், ஷைத்தான் உங்களுக்கு இரவு தங்குமிடம் கிடைத்து விட்டது எனக் கூறுவான். அந்த மனிதன் உணவு சாப்பிடும் போது அல்லாஹவை நினைவு கூறாவிட்டால், ஷைத்தான் உங்களுக்கு தங்குமிடமும், இரவு சாப்பாடும் உண்டு எனக் கூறுவான்.

வீட்டிக்குள் செல்லும் போது பிஸ்மி கூறுவது, லா இலாஹ இல் அல்லாஹ் போன்ற வார்த்தைகளை கூறுவதன் மூலம் அல்லாஹ்வை நினைவி கூறுவது மிகவும் முக்கியமான செயலாகும்.

மாலிக் இப்னு அஷ்அரி ரழியல்லாஹூ அன்ஹூ பின்வரும் ஹதீஸை அறிவிக்கிறார்கள். ஆதாரம் அபூ தவுத்.

إِذَا وَلَجَ الرَّجُلُ بَيْتَهُ فَلْيَقُلْ اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ خَيْرَ الْمَوْلَجِ وَخَيْرَ الْمَخْرَجِ بِسْمِ اللَّهِ وَلَجْنَا وَبِسْمِ اللَّهِ خَرَجْنَا وَعَلَى اللَّهِ رَبِّنَا تَوَكَّلْنَا ثُمَّ لِيُسَلِّمْ عَلَى أَهْلِهِ

ஒரு மனிதர் தனது வீட்டுக்குள் நுலையும் போது, “அல்லாஹூம்ம இன்னீ அஸ்அலுக ஹைரல் மவ்லுஜி, வ ஹைரல் மஹ்ரஜி, பிஸ்மில்லாஹி வலஜ்னா வ பிஸ்மில்லாஹி ஹரஜ்னா, வ அலல்லாஹி ரப்பனா தவக்கல்னா.” என்று கூறி அதன் பின் வீட்டில் உள்ளவர்களுக்கு சலாம் கூற வேண்டும்.

إِذَا وَلَجَ الرَّجُلُ بَيْتَهُ فَلْيَقُلْ اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ خَيْرَ الْمَوْلَجِ وَخَيْرَ الْمَخْرَجِ بِسْمِ اللَّهِ وَلَجْنَا وَبِسْمِ اللَّهِ خَرَجْنَا وَعَلَى اللَّهِ رَبِّنَا تَوَكَّلْنَا ثُمَّ لِيُسَلِّمْ عَلَى أَهْلِهِ

பொருள் அல்லாஹ்வே, பிரவேசிக்கும் இடத்தில் நன்மையும், வெளியில் செல்லும் இடத்தில் நன்மையும் உன்னிடத்தில் கேட்கிறேன் நாம் அல்லாஹ்வின் நாமத்தால் உள்ளே பிரவேசிக்கிறோம். அல்லாஹ்வின் நாமத்தால் வெளியில் கிளம்பிச் செல்கிறோம். எங்கள் இறைவனிடமே சகல

வற்றையும் ஒப்படைக்கிறோம்.'' என்று கூறிய பின் வீட்டில் உள்ளவர்களுக்கு சலாம் கூற வேண்டும்.

## 3. வீட்டுக்குள் செல்லும் போது வாயை சுத்தம்செய்துக் கொள்ளுதல்

எல்லாவற்றையும் விட, வீட்டுக்குள் செல்வதற்கு முன், பற்களை தீட்டி வாயை சுத்தம் செய்துக் கொள்வது மிக முக்கியமானதாகும்.

ஆயுஷா (ரழியல்லாஹு அன்ஹா) பின்வரும் ஹதீஸை அறிவித்தார்கள்' ஆதாரம் முஸ்லிம்.

أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَ إِذَا دَخَلَ بَيْتَهُ بَدَأَ بِالسِّوَاكِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீட்டுக்குள் செல்லும் போது வாயை சுத்தம் செய்வதற்து ஆரம்பித்து விடுவார்கள்.

## 4. வீட்டில் தொழுகை நடாத்துதல்

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு பின்வரும் ஹதீஸை அறிவிக்கிறார்கள்.

قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ اجْعَلُوا فِي بُيُوتِكُمْ مِنْ صَلَاتِكُمْ وَلَا تَتَّخِذُوهَا قُبُورًا

“உங்கள் வீடுகளில் தொழுகயை நடத்துங்கள். வீடுகளை கப்ருகளாக ஆக்கிக்கொள்ளாதீர்கள்.” என அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அறிவித்தார்கள்.

ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு பின்வரும் ஹதீஸை அறிவித்தார்கள்.

“உங்களில் ஒருவர் மஸ்ஜிதில் தொழுகையை நிறைவேற்றினால், அத்தொழுகையின் ஒரு பகுதியை தனது வீட்டில் நடத்தட்டும். தனது வீட்டில் தான் செய்யும் தொழுகையின் காரணமாக அல்லாஹ் நன்மைகளை வைத்திருக்கிறான்.

## 5. வீடுகளில் படங்கள், சிலைகள் போன்றவற்றை வைத்திருப்பதை விட்டும் தவிர்ந்துக் கொள்ள வேண்டும்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறிய பின்வரும் ஹதீஸை அபு தல்ஹா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். ஆதாரம் புஹாரி, முஸ்லிம்.

إِنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ إِنَّ الْمَلَائِكَةَ لَا تَدْخُلُ بَيْتًا فِيهِ الصُّورَةُ

“நிச்சயமாக, எந்த வீட்டில் படங்கள் வைக்கப் பட்டுள்ளதோ, அந்த வீட்டுக்குள் மலக்குகள் செல்ல மாட்டார்கள்.”

மற்றுமொரு ஹதீஸில் சிலைகள் வைக்கப்பட்டுள்ள வீடுகளுக்குள் மலக்குகள் செல்ல மாட்டார்கள்.” என அறிவிக்கப் பட்டள்ளது. ஆதாரம் புஹாரி.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறிய பின்வரும் ஹதீஸை அபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். ஆதாரம் முஸ்லிம்.

لَا تَدْخُلُ الْمَلَائِكَةُ بَيْتًا فِيهِ تَمَاثِيْلُ أَوْ تَصَاوِيْرٌ

“எந்த வீட்டுக்குள் சிலையோ, படமோ வைக்கப் பட்டுள்ளதோ, அப்படிப் பட்ட வீட்டுக்குள் மலக்குகள் செல்ல மாட்டார்கள்.”

ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த இது போன்ற் ஹதீஸ்கள் நிறைய உள்ளதாக புஹாரியில் பதிவாகியுள்ளன. இந்த ஹதீஸ்களின் அடிப்படையில், பின்வரும் விடயங்களை முன் வைக்க முடியும்.

- சமூகத்தில் புகழ் பெற்றவர்களின் படங்கள், திருமணப் படங்கள், நாட்டின் தலைவர்களின் படங்கள், மூதாதையரின் படங்கள் போன்றவற்றை வீட்டில் தொங்க விடுவது தடுக்கப் பட்டதாகும். நினைவு படுத்தும் நோக்கத்தில அவை தொங்கப் பட்டிருந்தாலும், அதுவும் தடுக்கப் பட்டதாகும்.
- விரிப்புகள், தலயைணை உரைகளில் படங்கள் இருப்பதும் தகுந்ததல்ல. தொழில் அடிப்படையில் படங்கள் வைக்கப் பட்டிருந்தால், அது தவறாகாது. உலர்ந்த உணவு வகைகள், பால் பெக்கட்டுகள் போன்ற உரைகளில் அச்சடித்திருக்கும் படங்கள், வியாபார விளம்பரங்கள் என்று கருதப்படுகின்றன. அதே போன்று, ஏதேனும் அத்தியாவசிய தேவைகள், அல்லது அதிகாரி களின் வற்புறுத்தல் போன்ற காரணங்களுக்காகவும் படங்களை தொங்க விட முடியும்.

- மிருகங்களின் தோலினால் செய்யப்பட்ட பிராணிகளின் உருவங்களை உபயோகிப்பதற்கு அனுமதி கிடையாது. இந்த விடயங்களைப் பற்றி ஷேய்க் பின் பாஸ் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளார்கள்.
    - வீண் விரயம்
    - சிலையுருவத்தில், மிருகங்களின் தோலினால் தயாரிக்கப் பட்ட பொருட்கள்.
    - அத்துடன் அந்த உருவச் சிலைகளைப் பார்க்கும் மனிதர்கள், அவை போன்ற குணங்களையும், நடத்தைகளையும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக எடுத்துக் கொண்டு அவற்றை பின்பற்ற முயற்சி செய்யக் கூடும்.

இப்படிப்பட்ட உருவப்படங்கள், சிலைகள் ஆகியவற்றின் முக்கிய அம்சம் அவற்றின் முகங்கள் தான். அந்த அடிப்படையில் இப்னு அப்பாஸ் ரழி யல்லாஹு அன்ஹு இவ்வாறு கூறினார்கள். தலை இருக்கும் சிலையாக இருப்பின், அதன் தலையை (உடைத்து) நீக்கிவிட்டால், அதன் பின் அது ஒரு உருவமாக இருக்க முடியாது.

## 6. வீட்டில் நாய்கள் நடமாடுவகற்கு இடமளிக் கக் கூடாது. வீட்டில் நாய்கள் வளர்க்காது தடுத்துக் கொள்ளுதல்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் கூறியதாக அபு தல்ஹா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

لَا تَدْخُلُ الْمَلَائِكَةُ بَيْتًا فِيهِ كَلْبٌ وَلَا تَصَاوِيرُ

எந்த வீட்டில் நாய்கனோ, உருவச் சிலைகளோ இருக்கிறதோ, அந்த வீட்டுக்குள் மலக்குகள் நுலைய மாட்டார்கள்.

இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுவும் இதே போன்ற கருத்தை அறிவித்திருக்கிறார்கள்.

அபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கும் ஒரு ஹதீஸில், எந்த வீட்டில் நாய்களோ, (பூசைக்காக அடிக்கும்) மணியோ இருக்கிறதோ, அந்த வீட்டுக்குள் மலக்குகள் நுலைய மாட்டார்கள். ஆதாரம் முஸ்லிம்.

அபு ஹுரைரா, இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹும் அறிவிக்கும் இன்னுமொரு ஹதீஸில், எவரேனும் பயிர்களை பாதுகாப்பதற்கு, பிரயாணம் செய்வதற்கு அல்லது வேட்டை யாடுவதற்கு பழக்கிய நாய்களைத் தவிர, வேறு நாய்களை வளர்ப்பார்களாயின், ஒவ்வாரு தினமும் அவனுடைய நற் கூலியில் இரண்டு கிராத் எடை குறையும்,

கிராத் என்பது ஒரு நாளில் ஒருவர் சம்பாதிக்கும் நற் கூலியின் ஒரு குறிப்பிட்ட அளவாகும். சில நேரம் அது இருபது நற்செயலுக்கு சமமாக இருக்க முடியும். அல்லது இருபத்தி நான்கு நற்செயலுக்கு சமமாக இருக்க முடியும். அப்படியும் இல்லாது வேறு ஏதாவது ஒரு அளவாகவும் இருக்கக் கூடும். எந்த அடிப்படையில் நோக்கினாலும், ஒவ்வொரு நாளும் அவனுடைய நற் கூலி குறைந்துக் கொண்டே இருக்கும்.

இங்கு கிராத் என்று கூறும் போது, ஒரு ஜனாஸா சம்பந்தமாக குறுப்பிடும் கிராத் அளவு என்றும், இவை இரண்டும் சம்மான பாரம் கொண்டவை என்று கூறப்பட்டுள்ளது, எனினும், ஜனாஸா சம்பந்தமாக குறிப்பிடும் போது, அது சம்பாதித்த நற்கூலியின் மகிமையை குறிப்பிடுவதால் அதன் அந்தஸ்து

மிகவும் உயரந்த்து. இந்தத் தலைப்பில் ஒரு குற்றத்திற்கு தண்டனையாக, நற்கூலியில் இருந்து குறைக்கப் படுவதால், அதன் மகிமை குறைவாகக் கருதப்பட்டாலும், இச்செயலின் பாவம் ஏனைய பாவங்களை விடப் பெரியதாக கருதப் படுவதை எடுத்துக் காட்டுகிறது.

ஜனாஸா சம்பத்தட்ட பாரத்தில், கிராத் என்பது ஒரு பெரிய மலையை, அல்லது, உஹுத் மலையை, அல்லது உஹுத் மலையை விட பிரம்மாண்டமான மலையை பற்றி குறிப்பிடுவதை இங்கு வாசகர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மேற் கூறிய ஹதீஸ்களின் அடிப்படையில் பெறக் கூடிய பாடங்கள்.

1. நாய்கள் வளர்ப்பது தடுக்கப் பட்டதாகும்.
2. (பூசைக்கு அடிப்பது போன்று) மணியடிப்பது தடுக்கப் பட்டதாகும். ஆனால், வீட்டுக்குள் வருவதற்கு அனுமது கோருவதற்கு சுவரில் போட்டிருக்கும் மணி ஒரு தேவைக்காக உள்ளதால், இந்த விஷயத்தில் இது சம்பந்தப்படாது. அது போன்று, தொலை பேசி, வாகனங்களில் பொருத்தி யிருக்கும் மணிகள், அவசரத் தேவைக்காக அல்லது பாதுகாப்புக்கான மணிகள் இந்த தலைப்பில் அடங்காது. (Emergency, Security bell)
3. அத்தியாவசியத் தேவையின்னி நாய்களை எமது வீட்டில் வளர்ப்பதன் மூலம் நாம் தேடிக்கொண்ட நன்மைகள் படிப்படியாகக் குறைந்துக் கொண்டு போகிறது. அதேபோன்று ஜனாஸா சம்பந்தப் பட்ட எல்லா காரியங்களில், அல்லது சில குறிப்பிட்ட காரியங்களில் கலந்துக் கொள்வதன் மூலம் எமது நன்மையின் எடை அதிகரிக்கும்.

4. எவ்வித அத்தியாவசிய தேவையுமின்றி நாய்களை வளர்ப்பது, இறை விசுவாசமற்ற குப்ருக்கு சமமாகும்.

## 7. சிலுவை அல்லது சிலுவை அடையாளத்தை வீட்டில் வைத்திருப்பது தடை.யாகும்

أَنَّ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ لَمْ يَكُنْ يَتْرُكُ فِي بَيْتِهِ شَيْئًا فِيهِ تَصَالِيبُ إِلَّا نَقَضَهُ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிலுவை அடையாளம் உள்ள எதையேனும் தனது வீட்டில் கண்டால், அதை அழிக்காது விட்டு வைக்கவில்லை என அயிஷா ரழியல்லாஹு அன்ஹா அறிவிக்கிறார்கள். ஆதாரம் ஸஹீஹ் புகாரி

## 8. புலி போன்ற காட்டு விலங்குகளின் தோலை வீட்டில் தொங்க வைப்தை அல்லது விரிப்பாக உபயோகிப்பது அல்லது அதன் மீது அமர்ந்து பயணம் செய்வது தடை.

இந்த தலைப்பு சம்பந்தமாக ஏராளமான ஹதீஸ்கள் உள்ளன. அவற்றுள் அல் மிக்தாத் பின் மஹ்தி கரீப் ரழியல்லாகு அன்ஹு அறிவித்த ஹதீஸ் பின் வருமாறு. காட்டு விலங்குகளின் தோலை உபயோகிப்பது அல்லது அதன் மீது அமர்ந்து பயணம் செய்வது போன்றவற்றை ரஸூல்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தடை செய்தார்கள். ஆதாரம் அஹ்மத், அபு தாவூத், அந் நஸாயி.

முஆவியா ரழியல்லாஹு அன்ஹு பின்வரும் ஹதீஸை அறிவிக்கிறார்கள். "புலித் தோல் மீது அமர்ந்திருப்பதை ரஸூல் ஸல்லல்லாஹு லைஹி வஸல்லம் தடை செய்தார்கள்." இன்னுமொரு அறிவிப்பில். "கீரிப்பிள்ளை அல்லது புலித் தோல் மீது அமர்ந்து பயணம் செய்யாதீர்கள்." என்று தடை செய்தார்கள். ஆதாரம் அஹ்மத், அபு தாவூத்.

அபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த இன்னு மொரு ஹதீஸில் இவ்வாறு கூறப்படுகிறது. எந்த இடத்தில் புலித் தோல் தொங்கவிடப் பட்டுள்ளதோ அங்கு மலக்குகள் சினேகம் வைத்துக் கொள்ள மாட்டார்கள். ஆதாரம் அபு தாவூத்.

அபு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு பின் வரும் ஹதீஸை அறிவிக்கிறார்கள். காட்டு விலங்குகளின் தோல்களை பாவனைக்கு எடுப்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தடைசெய்தார்கள். ஆதாரம திர்மிதி, அபு தாவூத்.

அலி ரழியல்லாஹு அன்ஹு பின்வரும் ஹதீஸை அறிவித்தார்கள். "அல்லாஹ்வுடைய நபியவர்கள் கீரிப் பிள்ளை தோலை பாவிப்பதையும் அதன் மீது அமர்ந்து பயணம் செய்வதையும் தடைசெய்தார்கள். அத்துடன் புலித் தோலை பாவிப்பதையும், அதன் மீது அமர்ந்திருப்பதையும், அதன் மீது அமர்ந்து பயணம் செய்வதையும் விட்டு தடைசெய்தார்கள். ஆதாரம அப்துர் ரஸ்ஸாக், அத் தஹாவி போன்றவர்கள்.

மேற் குறிப்பிட்ட ஹதீஸ்களின் அடிப்பைடயில், புலித் தோல் உபயோகிப்பது முழுமையா தடுக்கப் பட்டதொன்றாகும் என்பது தெளிவாகிறது. இந்த விஷயம் சம்பந்தமாக அபு ஹுரைரா,

மிக்தாத் ரழியல்லாஹு அன்ஹுமா போன்றவர்கள் அறிவித்த ஹதீஸ் போதுமானதாகும். அத்துடன் சுவர்களை அலங்கரிக்க அவற்றை உபயோகம் செய்வதும் அனுமதிப்பட்டதல்ல.

புலித் தோல் உபயோகம் செய்வது, அவற்றின் மீது அமர்வது, அவற்றில் அமர்ந்து பயணம் செய்வது ஆகியவைகளை தடைசெய்யக் காரணம் என்ன?

இப்னு கய்யூம், ஆஷ்ஷேய்க் பின் பாஸ் ரஹிமஹுமுல்லாஹ் போன்ற அறிஞர்களின் கருத்துப் படி, அந்த வன விலங்குகளின் கொடூர குணங்கள் மனிதர்களையும் பாதிக்கும். அத்துடன், பதனிட்டாலும் அவை சுத்தமாகாதவைகள் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த விஷயம் உண்மையானாலும் தடைக்கு இது ஒரு காரணமல்ல. இதன் பாவனை மூலம் தற்பெறுமை, இருமாப்பு ஏற்படுகிறது என்றும் குறிப்பிடப் படுகிறது. அபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அறிவிப்பதுது போல், இவை இருக்கும் இடங்களை விட்டும் மலக்குகள் தூரமாகிப் போவதற்கு ஒரு காரணமாகிறது. பொதுவாக எல்லா வன விலங்குகளின தோல்கள் விஷயத்திலும் இதுவே சட்டமாகும். இதனை குறிப்பிடும் ஹதீஸ்கள் நிறைய உள்ளன.

9. இசைக் கருவிகள் வீட்டில் வைத்திருப்பதும், இவற்றை உபயோகிப்பதும் தடைசெய்யப் பட்டவையாகும். அத்துடன் மனதை பேதலிக்கச் செய்யும் பொருட்களை பாவிப்பது தடைசெய்யப் பட்டுள்ளது.

   தகவல் பரிமாறிக் கொள்ள உபயோகப் படுத்த, அல்லாஹ் அருளிய ஊடகக் கருவிகள் விஷயம் பற்றி சற்று கவணம் செலுத்துவோம். இவற்றின் மூலம் பயன் பெறுவதாயின் அது பெரும் பாக்கியமாகும். இக்கருவிகளை தவறான நோக்கத்துக்காக பாவித்தால், அல்லது அதன் மூலம் கெட்ட

விளைவுகளைப் பற்றி கவணயீனமாக இருந்தால் அதன் மூலம் பெரும் அழிவு ஏற்படக் கூடும்.
சிலர் மஹ்ரம் அஜ்னபி என்ற இஸ்லாமிய கட்டுபாட்டைப் பற்றி அறிவில்லாமல் டெலிபோனில் பேசுகிறார்கள்.
பதிலும் கொடுக்கிறார்கள். இது பெரும் தவறாகும். முடிந்த அளவு வயது மூத்த ஆண்கள் டெலிபோனுக்கு பதில் கொடுக்க வேண்டும்' டெலிபோன் அழைப்புக்கு பதில் அளிக்க ஆண்கள் இருக்கும் போது, பெண்கள் முன் வந்து பதில் கொடுப்பது விரும்பத் தக்கதல்ல . இது ஆண்கள் கவனத்துக்கு எடுக்கப் பட வேண்டிய விஷயமாகும். இதன் மூலம இஸ்லாமிய சூழலை வளர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் ஆண்களின் பொறுப்பாகும்.

## 10. மலசலம் கழிக்கும் நேரங்களில், கிப்லாவை முன்னோக்கி அல்லது கிப்லாவுக்கு முதுகின் பக்கம் காட்டி அமர்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அபு அய்யூப் ரழியல்லாஹு அன்ஹு பின் வரும் ஹதீஸை அறிவிக்கிறார்கள். “நீங்கள் மலசலம் கழிக்கும் தேவைகளுக்காக போவதாயிருந்தால் கிப்லாவின் பக்கம் திரும்பாதீர்கள். அதோடு அதற்கு பின்பக்கம் திரும்பியும் இருக்காதீர்கள். அதற்கு பதிலாக மேற்குத் திசையை அல்லது கிழக்குத் திசையை நோக்கி இருங்கள். இது போன்ற ஒரு ஹதீஸை அபு ஹுரைரா, சல்மான் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களும் அறிவித்து முஸ்லிம் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு கட்டிடத்திற்கு உள்ளேயும், திறந்த இடத்திலும் இச்செயல் நடைபெறுவதில் வித்தியாசம் இருப்பதாக பெரும் பான்மையான கருத்துக்கள் தெரிவிக்கின்றன. ஒரு கட்டிடத்திற்குள் மலசலம் கழிக்கும் போது, கிப்லாவை நோக்கி அல்லது பின்பக்கம் திரும்பி இருப்பது தவறல்ல, ஆனால் திறந்த வெளியில் இவ்வாறு இருப்பது ஏற்றதல்ல என்பது சிலரது கருத்தாகும். எனினும் கட்டிடத்திற்குள்ளும் மலசலம் கழிக்கும்போது இவ்வாறு இருப்பதை தடுத்துக் கொள்ளவதே சிறந்தது. ஷெய்குல் இஸ்லாம், இப்ன் கய்யூம் போன்ற மார்க்க அறிஞர்கள் பொதுவாக இது தடுக்கப் பட்டது என்று அறிவிக்கின்றார்கள். ஷெய்க் பின் பாஸின் கருத்துப் படி, கட்டிடத்திற்கு உள்ளேயும் இதனை தவிர்த்துக் கொள்வது சிறந்தது. ஷெய்க் உதைமீன் கூறும் கருத்துப்படி, கட்டிடத்திற்குள் கிப்லாவை நோக்குவதற்கும், பின் பக்கம் திரும்புவதற்கும் வித்தியாசம் உள்ளது. இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த ஒரு ஹதீஸில் கிப்லாவை முன்னோக்கி இருப்பது தடை என்றும், பின் பக்கம் திரும்பி இருப்பது தவறல்ல என்றும் புஹாரி, முஸ்லிம் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளது.

## 11. தங்கம், வெள்ளியில் செய்த உபகரணங் களை பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

உணவு சாப்பிடுவது, வுழு செய்வது போன்ற செயல்களுக்காக தங்கம்,வெள்ளி உபகரணங்களை உபயோகிப்பது தடையாகும். உம்மு சலமா ரழியல்லாஹு அன்ஹா அறிவித்த ஹதீஸில் தங்கம்,வெள்ளி உபகரணங்களை உபயோகிப்பவன், நரகத்தின் நெருப்பைக் கொண்டு தனது வயிற்றை நிரப்பிக் கொள்கிறான். ஆதாரம் புஹாரி, முஸ்லிம்.

இந்த ஹதீஸில் தங்கப் பாத்திரங்கள் என்றும், உணவு சாப்பிட என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆதாரம் முஸ்லிம். இதன்படி எவர் தங்க, வெள்ளித் தட்டுகளில், கோப்பைகளில் உணவு சாப்பிட, ஏதேனும் அருந்துவதற்கு உபயோகிக்கிறாரோ, அவர் தன் வயிற்றை நெருப்பினால்  நிறைத்துக் கொள்கிறார்.

இன்னுமொரு ஹதீஸில், உண்மையிலேயே காபிர்களுக்கு இவ்வுலகில் இவை கொடுக்கப் படுகின்றன. உங்களுக்கு ஆகிரா வில் இவை உள்ளன என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

## 12. வீட்டுக்குள் வருபவர் வீட்டில் இருப்பவர் களின் அனுமதி கோர வேண்டும்.

அபு மூஸா ரழியல்லாஹு அன்ஹு பின் வரும் ஹதீஸை அறிவிக்கிறார்கள். அனுமதி கோருவது மூன்று முறையாகும். உங்களுக்கு அனுமதி கிடைத்தால் அதனை ஏற்றுக் கொள்ளவும். கிடைக்கா விட்டால் திரும்பிப் போகவும். மூன்று முறைக்கு மேல் மீண்டும், மீண்டும் அனுமதி கேட்பது தகாத செயலாகும். இது வீட்டில் இருப்பவர்களை தொல்லை செய்வதாகும். உங்கள் வருகை பற்றி வீட்டில் இருப்பவர்கள் அறிந்தும், உங்களுக்கு அனுமதி கொடுக்காமல் இருப்பதற்கு ஏதேனும் காரணம் இருக்கக் கூடும். வீட்டில் இருப்பவர்கள் உங்கள் வருகையைப் பற்றி தெரிந்திருந்தாலும், தெரியாது இருந்தாலும் மூன்று முறை அனுமதி கோருவது மிகவும் முக்கியமாகும். உங்களை திரும்பிப் போகுமாறு வீட்டில் உள்ளவர்கள் கூறினால், அதன் பின்பும் அனுமதி கோருவது தவறாகும். ஆதாரம் முஸ்லிம்.

அல் குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்.

“ உங்களை திரும்பிப் போகும் படி சொன்னால், நீங்கள் திரும்பி போய் விடுங்கள். இது உங்களுக்கு நல்லதாகும். நீங்கள் செய்பவைகளைப் பற்றி அவன் ஞானம் நிறைந்தவன். அல் குர்ஆன் உச -உஅ.
வீட்டில் உள்ளவர்களை அழைப்பது, அல்லது கதவை தட்டுவது அல்லது மணியை அடிப்பது போன்ற முறையில் அனுமதி கோர முடியும்.

நெருங்கிய உறவினர்கள் அல்லது வீட்டில் வசிப்பவர்கள் ஒருவரிடம் ஒருவர் அனுமதி கோருவது பற்று அல்லாஹ் குர்ஆனில் தெளிவாகக் கூறியுள்ளான்.

‘விசுவாசம் கொண்டார்களே, உங்களுடைய வலக்கரம் சொந்த மாக்கிக் கொண்டவர்களும், உங்களில் பிராயமடையாத சிறுவர் களும், மூன்று நேரங்களில் அவர்கள் அனுமதி கோர வேண்டும். பஜ்ருக்கு முன்னாலும், உச்சிப்பொழுதில் ஆடைகளை கலைந்து வைத்திருக்கும் நேரத்திலும், இஷாவுக்குப் பின்னரும், (இவை) உங்களுடைய மறைவான மூன்று நேரங்களாகும். இவற்றுக்குப் பின் உங்கள் மீது குற்ற மில்லை. அவர்கள் மீதும் குற்றமில்லை. அவர்கள் உங்களிடம் சுற்றி வருபவர்கள். உங்களில் சிலர் சிலரிடம். இவ்வாறு அல்லாஹ் வசனங்களை விளக்குகிறான். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன். தீர்க்கமான அறிவுடையவன். குர்ஆன் உச -ருஅ.

வீட்டின் வேலைக்காரர்களும், வயது வந்த பிள்ளைகளும் இப்படிப்பட்ட நேரங்களில், அனுமதியின்றி பிரவேசிப்பதை விட்டும் தடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கட்டளை இடப்படுகின்றனர்.

வயது வந்தவர்கள் எல்லா நேரங்களிலும் அனுமதி கோர வேண்டும்.

அத்தா இப்னு யஸார் அறிவித்த இன்னுமொரு ஹதீஸ் பற்றி இமாம் மாலிக் குறிப்பிடுகிறார்கள்.
'அல்லாஹ்வின் தூதரே! எனது தாயிடம் நான் அனுமதி கோர வேண்டுமா?' என ஒரு மனிதர் கேட்டார். அதற்கு நபியவர்கள், 'உன்னுடைய தாயிடம் நீ அனுமதி கோரவேண்டும்.' என்று கூறினார்கள். 'நான் தான் எனது தாயை கவணித்துக் கொள்பவன்' என்று கூறினான். அதற்கு நபியவர்கள், 'உன்னுடைய தாயிடம் நீ அனுமதி கோரவேண்டும். அவள் ஒழுங்காக தன்னை மறைத்துக் கொள்ளாத நிலையில் அவளை பார்க்க நீ விரும்புவாயா?' என்று வினவினார்கள். அந்த மனிதன் 'இல்லை' என பதிலளித்தான். 'அப்படியானால் உன்னுடைய தாயிடம் நீ அனுமதி கோரவேண்டும்'. என்று அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள்.

## 13. அநாவசிமாக சுவர்களை அலங்கரித்து மறைப்தை தவிர்த்துக் கொள்ளுதல்.

.

ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் பின் வரும் ஹதீஸை அறிவித்தார்கள். ஆதாரம் முஸ்லிம். "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுவரை மறைத்து தொங்க விடப்பட்ட அலங்காரத்தைக் கண்டு அதனை கிழித்தெறிந்து, "நிச்சயமாக கல்லையும் மண்ணையும் மறைத்து அலங்கரிக்கும் படி அல்லாஹ் எங்களுக்கு உத்தர விடவில்லை.' என்று கூறினார்கள்.

அதிக சூடு, அதிக குளிர் ஆகியவற்றிலிருந்து காத்துக் கொள்ள சுவர்களை மறைக்க அனுமதி இருப்பதாக அபு முஹம்மத்

அறிவிக்கிறார்கள். அதே போன்று பலகையால் செய்யப்பட்ட சுவர்களை புடவையால் மறைப்பது தவறல்ல. எனினும், அவசியமின்றி சுவரை இவ்வாறு மறைப்பது வீண் விரயமாகும். சுவர்களை இவ்வாறு மறைத்து அலங்கரிப்பது வெறுக்கத் தக்க செயலாகும் அதற்குக் காரணம் அது எவ்வித அவசியமுமற்ற வீண் விரயமாகும். எனினும் ஜன்னல், கதவுகளுக்கு இவ்வாறு துணிகள் தொங்கவிடுவது தவறல்ல என சமீப கால மார்க்க அறிஞர் ஷெய்ஹ் பின் பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## 14. விருந்தாளிக்காக தேவையான வற்றை வீட்டில் வைத்திருப்பது.

ஒரு விருந்தாளிக்காக தேவையான, உடை, உடம்பை துவட்டும் துவாலை, கட்டில், விரிப்பு போன்றவற்றை வீட்டில் தயாராக வைத்திருப்பது தவறல்ல. ஆனால் தேவைக்கு மீறிய அளவு வைத்திருப்பது, வீண் விரயமாகும் வகையில் வைத்திருப்பது விரும்பத்தக்கதல்ல. “ஒரு கட்டில் ஆணுக்கும், ஒரு கட்டில் பெண்ணுக்கும், இன்னொரு கட்டில் விருந்தாளிக்கும் போதுமானது. நான்காவது கட்டில் ஷெய்தானுக்காகும்.”

## 15. உணவு, பானங்களில் வீண் விரயம் செய்யக் கூடாது.

அல் குர்ஆன் எ-ஈகவது வசனத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான். “நீங்கள் உண்ணுங்கள். பருகுங்கள். ஆனால் அளவு கடந்து வீண் விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக, வீண் விரயம் செய்பவர்களை அவன் (அல்லாஹ்) விரும்புவதில்லை.

அது போல் அல் குர்ஆன் கள –26,27 வது வசனங்ளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.
26. அளவு கடந்து வீண் விரயம் செய்யாதீர்கள்.

27, நிச்சயமாக வீண் விரயம் செய்பவர்கள் ஷெய்தானின் சகோதரர்கள் ஆவார்கள். ஷெய்தானோ இறைவனுக்கு நன்றி செலுத்தாது (மாறு செய்தவனாக) இருக்கின்றான்..

“நீங்கள் வீண் விரயமும், பெருமையும் கலக்கப்படாதவற்றை உண்ணுங்கள், பருகுங்கள். மற்றவர்களுக்கும் கொடுங்கள். ஆடைகளையும் அணியுங்கள்.” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்ததாக அம்ர் இப்னு ஷுஅயிப் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்தார்கள். ஆதாரம் அஹமத், நஸாஇ, இப்னு மாஜா மற்றும் ஏனைய ஹதீஸ் களில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்றைய சமுதாயத்தில், பெருமளவிலான உணவு, பானங்கள் குப்பை கூடைகளில் எறியப்படுவதை காண முடிகிறது. இவ்வாறு உணவு, பானங்களை குப்பையில் எறிவது, அல்லாஹ் எமக்கு கொடுத்த அருளை கேவலப் படுத்துவதாகும். அல்லாஹ் எமக்கு கொடுத்த அருளை கேவலப்படுத்துவது என்பது, அந்த அருளை கொடுத்த அல்லாஹ்வை கேவலப்படுத்துவது போன்ற செயலாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டிய வழிமுறையை பின்பற்றுவது முஸ்லிம்கள் அனைவரதும் பொறுப்பாகும். “ஒருவருடைய உணவு இரண்டு பேர்களுக்கு போது மானதாகும். இருவருடைய உணவு நான்கு பேர்களுக்கு போதுமாகும். நான்கு பேர்களுடைய உணவு எட்டு பேர்களுக்கு

போதுமாகும்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ஆதாரம் முஸ்லிம்.

ஒருவர் தான் சாப்பிடக் கூடிய அளவுக்கு மாத்திரம் தனது பிங்கானில் உணவை போட்டுக் கொள்ள வேண்டும். தான் எடுத்த உணவை முழுமையாக சாப்பிட முடியாவிட்டால், எஞ்சிய உணவை குப்பைத் தொட்டியில் எறியாமல், அடுத்த வேலைக்கு உயோகப்படுத்தக் கூடியதாக குளிர் சாதனப் பெட்டியில் எடுத்து வைக்க வேண்டும். அல்லது பசியில் வாடும் ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். அல்லது பிராணிகளின் பசியையாவது போக்க வேண்டும். அதுவும் முடியாது போனால், சுத்தமான இடத்தில் வைக்க வேண்டும். (இவ்வறு உபயோப் படுத்த வேண்டுமென்றால், ஒருவர் தனது உணவை எவ்வாறு சாப்பிட வேண்டும் என்பது புலனாகிறது.

## 16. கட்டிடங்கள் கட்டும் போது எல்லையை மீறாது இருப்பது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக, இபு ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு பின் வரும் ஹதீஸை அறிவித்தார்கள். "ஆடு மேய்க்கும் இடையன் உயர்ந்த கட்டிடங்களை கட்டுவதற்கு போட்டி போடுவான். (இது) உலக முடிவின் ஒரு அடையாளமாகும்." ஆதாரம் சஹீஹ் அல் புஹாரி.

உயர்ந்த கட்டிடங்களை கட்டுவதன் விளைவுகளை பற்றி கப்பாப் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த ஒரு ஹதீஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறது. "ஒருவன் மண்ணுக்காக செய்யும் செலவைத் தவிர, மற்ற எல்லா செலவுகளுக்காகவும் கூலி கொடுக்கப் படுவான்." ஆதாரம் அஹமத்.

இந்த ஹதீஸை அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வேறு வார்த்தைகளில் இவ்வறு அறிவித்தார்கள். "கட்டிடங்கள் கட்டுவதில், செலவைத் தவிர எவ்வித நன்மையும் இல்லை."

"அல்லாஹ் தன் அடியானுக்கு ஏதேனும் தீமையை எதிர் பார்த்தால், ஒரு கட்டிடத்தை கட்டி முடிக்கும் வரையில், அதனை (அவனுக்கு) அழகு படித்திக் காட்டுகிறான்." என தபரானி தன் கிரந்தத்தில் அறிவிக்கிறார்கள்.

இது சம்பந்தமாக அபு பஷர் அல் அன்சாரி ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த பின் வரும் ஹதீஸில் இவ்வாறு அறிவிக்கப் படுகிறது. "அல்லாஹ் தன் அடியானுக்கு ஏதேனும் தீமையை எதிர் பார்த்தால், அவனது பணத்தை கட்டிடம் கட்டுவதில் செலவு செய்ய விடுகிறான்." ஆதாரம் அபு தாவூத்.

ஒரு நாள், அப்துல்லாஹ் இப்ன் அமீர், இப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹும் இருவரும் ஒரு சுவரை கட்டிக் கொண்டிருக்கும் போது, அந்த இடத்தை கடந்து சென்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "(உண்மை நிலை) இதனை விட ஆச்சரியம் நிறைந்தாகும்." என்று கூறினார்கள்.

## 17. வீட்டில் அல் குர்ஆன் ஓதுவது.

வீட்டில் அல்குர்ஆன் ஓதுவது, அபிவிருத்திக்கும், ஷைத்தானை விரட்டுவதற்கும் காரணமாகிறது.

"உங்கள் வீடுகளை கப்ர் ஸ்தலமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். எந்த வீட்டில் சூரா பகரா ஓதப்படுகிறதோ, அந்த் வீட்டிலிருந்து ஷைத்தான் வெருண்டு ஓடுகிறான்." என நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபு ஹுரைரா ரழி யல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். ஆதாரம் முஸ்லிம்.

இப்ன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அறிவித்த ஒரு ஹதீஸில் இவ்வாறு கூறப்படுகிறது. "உங்கள் வீடுகளில் நீங்கள் தொழுகையை நடத்துங்கள். அவைகளை (வீடுகளை) கப்ரு களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்." இந்த ஹதீஸ்கள் கப்ர்கள் தொழுகை நடத்துவதற்கு தகுந்த இடங்களல்ல என்று விளக்கப் படுத்துகின்றன. அத்துடன் எந்த வீடுகளில் சுன்னத்தான தொழுகை நடத்தப்படவில்லையோ, அல் குர்ஆன் ஓதப்பட வில்லையோ, அப்படிப்பட்ட வீடுகள் கப்ர் ஸ்தானங்களுக்கு சமமாகின்றன.

## 18. வீட்டில் ஒளிந்திருக்கும் பாம்பை எச்சரிக்கை செய்யாது கொல்வதை தடுத்துக் கொள்ள வேண்டும்.

வீட்டில் ஒளிந்துக் கொண்டிருக்கும் பாம்பைக் கொல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக இப்ன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். ஆதாரம் புஹாரி. இன்னுமொரு ஹதீஸில் அவைகள் வீட்டிலுள்ள ஜின்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இது எச்சரிக்கை கொடுப்பதற்கு முன்னால் உள்ள நிலையாகும். அப்படியானால், எச்சரிக்கை செய்த பின்பு அவற்றை கொல்வதற்கு அனுமதியுண்டு.

"மதீனா நகரில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஜின்கள் கூட்டம் ஒன்று இருந்தது. அவர்களில் எவரையாவது நீங்கள் கண்டால் மூன்று நாட்கள் அவர்களுக்கு அவகாசம் கொடுங்கள். அதற்குப் பின்பும் அவற்றை நீங்கள் கண்டால் அவற்றை கொன்று விடுங்கள். ஏனெனில் அவைகள் ஷெய்தான்களாகும்." என்ற

ஹதீஸை ஸஈத் ரழியல்லாஹு அறிவிக்கிறார்கள். ஆதாரம் இஸ்லாம்.

## 19 வீட்டுச் சொந்தக்காரருக்கு சலாம் கூறுவது. பிற மனிதர்கள் மாத்திரமன்றி வீட்டில் வாழும் அனைவரும் வீட்டுக்குள் நுலையும் போது சலாம் கூறுவது அவசியம்

“நீங்கள் வீட்டுக்குள் செல்லும் போது உங்களுக்கிடையில் சலாம் சொல்லுங்கள். அது அல்லாஹ்விடம் இருந்து பாக்கியம் பெற்ற அழகிய சலாம் ஆகும். நீங்கள் அறிந்துக்கொள்வதற்காக அல்லாஹ் இவ்வாறு தெளிவாக்கியுள்ளான். குர்ஆன் 24 – 61

## 20 திருமணம் செய்வதற்கு ஆகுமான ஒரு அன்னிய பெண்ணுடன், வீட்டில் ஒரு ஆண் தனிமையாக் இருப்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். “(பெண்கள் இருக்கும் இடத்திற்கு பிரவேசிப்பதைப் பற்றி நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன்) அந்த சந்தர்ப்பத்தில் ஒருவர் எழுந்து, ‘ஹுமு வு’ பற்றி உங்கள் கருத்து என்ன? என்று வினவினார். (அதாவது கணவனின் சகோதரன் அல்லது தந்தையின் சகோதரனின் பிள்ளைகள் – மச்சான், மதனி போன்றவர்கள்) அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ‘ஹுமு வு’ மரணமாகும் என்று கூறினார்கள். அதன்பொருளாவது, நீங்கள் மரணத்தைப் பற்றி எச்சரிக்கையா இருப்பது போல் இந்த

விஷயத்திலும் எச்சரிக்கையாக நடந்துக் கொள்ள வேண்டும். அல்லது ஒரு ஆண் இவ்வறு பிரவேசிப்பது இஸ்லாத்துக்கு முரணான செயலில் ஈடுபடுவது போன்றதாகும். இவ்வாறு பிரவேசிப்பதன் மூலம் ஏதேனும் அசம்பாவிதம் சில வேலைகளில் நடப்பதற்கு வாய்ப்பு ஏற்படக் கூடும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த எச்சரிக்கையாகும்.

## 21. வீட்டை கட்டும் போது போதிய இட வசதியுடன் கட்டுவது

வீட்டில் வசிப்பவர்களின் தேவைக்கு ஏற்றவாறு போதிய இட வசதியுடன் கட்டுவது மிகவும் சிறந்தது. உதாரணமாக ஒரு அறையுள்ள வீட்டில் மொத்த குடும்பத்தவர்களும் வசிப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல. கணவன் மனைவிக்கிடையில் நடக்கும் சகல விஷயங்களையும் பிள்ளைகள் பார்த்துக் கொண்டிருக்கும் அளவுக்கு அசிங்கமான சூழ் நிலையை அது உருவாக்கும். ஆகையால் தேவைக்கேற்ப வெவ்வேரான அறைகளை அமைத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. “நான்கு பேர்கள் மிகவும் சந்தோஷத்துடன் வாழ்க்கை நடத்து வார்கள். போதிய இட வசதியுள்ள வீடுள்ளவர் அதில் ஒருவராவார்” என்று நபி ஸல்ல்லலாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அறிவித்தார்கள். ஆதாரம் இப்னு ஹிப்பான்.

## 21 மேசை, புஸ்தகங்கள் வைப்பதற்கு தளபாடம், புதிய விஷயங்களை பார்ப்பதற்கு, வாசிப்ப தற்கு, கேட்பதற்கு தேவையான ரேடியோ, டெலிவிஷன், கொம்பியூடர்

போன்றவை வீட்டில் வைத்திருப்பது மகிழ்ச்சியான விடயங்களாகும்.

இவை ஒரு வீட்டில் இருப்பின் தனது பெறுமதி வாய்ந்த நேரத்தை பாதுகாத்துக் கொள்ள உதவியாக இருக்கும். அத்துடன் தனது பெறுமதி வாய்ந்த நேரத்தை, தேவையற்ற விஷயங்களில் வீணாக்காது ஆன்மீக வளர்ச்சிக்காக, அறிவு வளர்ச்சிக்காக உபயோகிக்க கருத்தில் கொள்ள வேண்டும்.

## 23. அல்லாஹ்வின் பெயரெழுதப்பட்ட கடதாசி கள், புத்தகங்கள் ஆகியவற்றை எறியும் போது அவற்றின் கண்ணியம் குறையாத முறையில் செய்ய வேண்டும்.

அல்லாஹ்வின் திரு நாமம் எழுதப்பட்ட எதனையேனும் எறிய நேர்ந்தால் அவற்றை சின்னஞ் சிறு துண்டுகளாக வெட்டி அல்லது தீயிலிட்டு அழித்து விட வேண்டும். அப்படியிள்ளாது, அவற்றின் கௌரவத்தை குறைக்கும் அல்லது கேவலப்படுத்தும் வகையில், எதையேனும் துடைப்பது அல்லது சுற்றுவது போன்றவற்றிற்காக உபயோகப் படுத்தக் கூடாது.

எல்லா அறிவும் அல்லாஹ்வுக்கே உரியன.